tized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalga

வெளியீடு எண். 1032.

ஓ

சிவமயம்

திருநெல்வேலித் தலச் சிறப்பும் தேவாரத் திருப்பதிகமும்

சம்பந்தர்

தருமை ஆதீனம்] [அடக்க விலை ரூ. 5-00

2002

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்



ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

திருவாவடுதுறை ஆதீனம்
சீர் · வளர் ∴ சீர்
குரு மகா சன்னிதானம்
அவர்கள் வாழ்த்தி வழங்கி
அருளியது .....

வெளியீடு எண். 1032.

சிவமயம்

திருநெல்வேலித் தலச் சிறப்பும் தேவாரத் திருப்பதிகமும்

- 5 MAR 2003

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் ஆலய

இராஜகோபுரங்களின் பாலாலய விழாவிற்கு

எழுந்தருளியபோது

வழங்கப்பெற்றது

ஞானசம்பந்தம் பதிப்பகம்

தருமை ஆதீனம்

2002

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation

ஞானசம்பந்தம் அச்சகம்
தருமபுரம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

குருபாதம்

முன்னுரை

திருச்சிற்றம்பலம்

அண்ணல் ஆலவாய், நண்ணினுன் றனை
எண்ணி யேதொழத், திண்ணம் இன்பமே.

— ஞானசம்பந்தர்.

இறைவன் உயிர்களுக்கு அருள்வழங்க எழுந்தருளி யுள்ள இடங்களே கோயில்கள் எனப்படும். இத்தகைய கோயில்களில் தேவாரத் திருப்பதிகங்களைப் பெற்றவை மிக்க சிறப்புடையனவாகப் போற்றப்படும். தேவாரப் பாடல் பெற்ற சிவதலங்கள் இருநூற்றெழுபத்துநான்கு உள்ளன. அவற்றுள் தென்பாண்டிநாட்டில் விளங்குவன பதினன்கு. திருநெல்வேலி பாண்டிபதினன்கு தலங்களில் ஒன்றாகும். பாண்டியமன்னர்களும் அவர்களுக்குப்பின் அந் நாட்டை ஆண்டமன்னர்களும் திருநெல்வேலியிலிருந்தும் அரசாண்டுள்ளனர் என அறிகிறோம். திருநெல்வேலிக்குப் பெருமை சேர்ப்பது அருள்மிகு நெல்லையப்பர் திருக் கோயில். திருமால் முதலிய தேவர்களும் அகத்தியர் முதலிய முனிவர்களும் மன்னர்கள் பலரும் இத்தலத்தில் வந்து வழிபட்டுள்ளனர்.

சமய உலகில் புகழ்பெற்ற இத்திருக்கோயிலில் நடராஜப் பெருமானின் ஐந்து சபைகளில் ஒன்றான தாமிரசபை உள்ளது. திருஞானசம்பந்த சுவாமிகள் காலத்தில் வாழ்ந்த நின்றசீர்நெடுமாற பாண்டியமன்னர்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation

இத்திருக்கோயிலைத் திருப்பணி புரிந்து வழிபட்டுள்ளார். மதுரைக் கோயிலைப்போலப் புகழ்மிக்கது நெல்லையப்பர் கோயில். சிற்பக்கலைக்கும் மக்களின்பக்திப்பெருக்கிற்கும் எடுத்துக் காட்டாக இக்கோயில் விளங்குகிறது.

திருநெல்வேலிக்குப் பிறிதொரு பெருமை இங்குள்ள சைவநன்மக்களால் விளைவதாகும். நாள்தோறும் காலையிலெழுந்து தாமிரவருணியில் நீராடி இறைவழிபாடு புரியும் கடப்பாடுடையவர்களாய் இவர்கள் விளங்கிவருகின்றனர்.

தருமைஆதீனத்துக்குச்சொந்தமான திருமடம்நெல்லை புகைவண்டிச் சந்திப்புக்கு அருகில் நெல்லையப்பர்பெரு வழிச்சாலையின் அருகில் உள்ளது. ஆருவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருமூர்த்தம் இங்குள்ளது. நெல்லைத் திருமடத்தில் ஆதீனத்திருக்கூட்டத்துஅடியவர்ஸ்ரீவெள்ளி யம்பலவாணமுனிவர், ஸ்ரீதமிழாகரர் முதலியோர் கட்டளை சுவாமிகளாக விளங்கி இந்தத்திருமடத்தை வளர்த்துள் ளனர். ஆதீன நிலபுலன்களும் திருக்கோயில் கட்டளை களும் இத்திருமடத்தின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளன.

தமிழகத்தில்புகழ்பெற்று விளங்கும்திருநெல்வேலியில் விளங்கும் அருள்மிகு காந்திமதி அம்மையோடு உடனுறை யும் அருள்மிகு நெல்லையப்பர்திருக்கோயில் ஐந்து இராஜ கோபுரங்களுடன் பெருந்திருக்கோயிலாக விளங்குவது. இவ்வாலயத் திருப்பணி காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளால் 6—6—2002 அன்று தொடங்கிவைக்கப்பெற்றது. இதுபோது இத்திருப் பணியின் தொடக்கமாக ஐந்து இராஜ கோபுரங்களின் பாலாலய விழா 8—9—2002 ஞாயிற்றுக்கிழமை காலை,

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருமுன்னிலையில் நிகழவுள்ளது.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர்

" கயிலைமாமுனிவர் "

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும்

இவ்விழாவில் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

சைவ மெய்யன்பர்கள் பலரும் இவ்விழாவிற்கு வருகைதந்து தரிசித்தும் திருப்பணிகளில் பங்குகொண்டும் விரைவில் திருப்பணிகள் நிறைவேறி மகாகும்பாபிஷேகம் இனிது நிகழ உதவி இறையருட்பேறுகள் பலவும் பெற்று இன்புறுவார்களாக.

கொன்றையந்தார் வேணியற்குக் கோயில் பலசமைத்துப்
பொன்றியவை முற்றும் புதுக்குவித்து - நின்றூர்
அவலோகந் தன்னில் அடையார், அடைவர்
சிவலோகந் தன்னிற் சிறந்து. — துகளறுபோதம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
திருவுளப்பாங்கின்வண்ணம்
சுந்தரமூர்த்தித் தம்பிரான்
தென்மண்டலக் கட்டளை விசாரணை,
திருநெல்வேலி.

தருமை ஆதீனம்
3-9-2002

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation

சிவமயம்

தருமை ஆதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சிரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலிவன் எங்கோன்
காரணியும் நெடிய பொழிற்கமலே வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

– சம்பந்தசரணாலயர்

ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் குலத்தில் சுப்பிரமணியபிள்ளைக்கும் மீனாட்சியம்மைக்கும் அருந்தவ மகவாக அவதரித்தார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். மதுரையம் பதிக்குத் தம் பெற்றோருடன் சென்று குலதெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டார். திருவருளால் பொற்றொ மரைக்குளத்தில் ஈசானமூலையில் பெட்டகக் கோயிலுடன் சொக்கநாதர் கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப் பெற்றார். சொக்கேசன் அருளால் திருவாரூர் சென்று ஞானப்பிரகாச தேசிகரை வணங்கிச் சிவஞானோபதேசம்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgaon

தருமை ஆதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக
பரமாசாரிய சுவாமிகள்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

பெற்றார். சொக்கநாதர் பூஜையும், எழுந்தருளச்செய்து கொடுக்கப்பெற்றார். குருவாணைப்படித் தருமபுரத்தில் அமர்ந்து பக்குவான்மாக்களுக்கு ஞானோபதேசம் செய்து சைவ சித்தாந்தத்தைப் பரவச் செய்தார். தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதர் மீது சொக்கநாத வெண்பாப் பாடித் துதித்தார். சிவபோக சாரம், முத்திநிச்சயம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப் பிரகாசமாலை,சோடசகலாப்பிராசாதசட்கம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் நவரத்தினமாலை ஆகிய நூல் களையும் அருளி, சைவ சித்தாந்தத்தைப் பரவச்செய்தார்.

இவ்வாறு, பல்லாண்டுக் காலம் ஞான அரசாட்சி புரிந்து சிவலிங்கத் திருவுருவின் கீழ் ஜீவசமாதி கூடினார் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவர் ஜீவசமாதி கூடிய குருமூர்த்தமே தற்பொழுது ஸ்ரீ ஞானாம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக விளங்கி வருகிறது. கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்ற இத்தருமை ஆதீனம் மொழித் தொண்டும், சமயத் தொண்டும், சமூகத் தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றிவருகிறது. ஸ்ரீ குருஞான சம்பந்தரது பரம்பரையில் தற்பொழுது 26 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி இருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்களால் தமது ஆதிபரமா சாரிய சுவாமிகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப் பெயரில் நிறுவப்பெற்ற "ஞானசம்பந்த பதிப்பக" அறக் கட்டளை வெளியீடாக, இந்நூல் வெளியிடப்பெற்றது.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

y eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation

உ

சிவமயம்

திருநெல்வேலித் தலச் சிறப்புக்கள்

தமிழகத்தின் புகழ்பெற்ற மாவட்டத்தலை நகரங்களில் ஒன்று திருநெல்வேலி. தென்பாண்டி வளநாட்டில் மதுரைக்கு அடுத்த பெரிய நகரமாய் இவ்வூர் விளங்கி வருகிறது. மன்னர்குடாக்கடலுக்கும் பொதிகை மலைக்கும் இடைப்பட்டதாய் விளங்கும் இந்நகர் தண்பொருனை என்னும் தாமிர வருணி ஆற்றின் வடகரையில் உள்ளது. மதுரையிலிருந்து கன்னியாகுமரி செல்லும் நெடுஞ்சாலை இந்நகர் வழியே செல்கிறது.

தமிழகத்தின் அனைத்து நகரங்களிலிருந்தும் புகை வண்டித் தொடரில் திருநெல்வேலி செல்லலாம். இரயில் சந்திப்பும்சிறுரயில்நிலயங்களும்உள்ளன. அனைத்துநகரங்களிலிருந்தும் இவ்வூருக்குப் பேருந்துகளிலும் வரலாம்.

தலப்பெருமை

இந்நகரத்துக்குத் தனிப் பெருமை தருவது அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலாகும். பாண்டி நாட்டு பதினான்கு தேவாரத் தலங்களில் இத்தலமும் ஒன்றாகும். சமயஉலகில் புகழ்பெற்ற சிவாலயம் இது. ஞானசம்பந்தர் எழுந்தருளி வழிபாடாற்றி அருளியதொரு அழகிய திருப்பதிகம் இங்குள்ள இறைவர் பெருமையையும், இவ்வூரின் இயற்கை எழிலையும் தலச் சிறப்பையும் தெரிவிக்கிறது. நின்றசீர் நெடுமாறபாண்டியரின் அழகிய திருப்பணியைப் பெற்றது. நடராஜப் பெருமான் எழுந்தருளிய ஐந்து சபைகளில் தாமிர சபை இங்குள்ளது.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

திருமால், பிரமன், அகத்தியர் பூசித்தது. நெல்லையப்பர் எனவும், மூங்கிற் புதரிலிருந்து வெளிப்பட்ட காரணத்தால் வேணுவனநாதர் எனவும் இங்குள்ள இறைவர் வழங்கப் பெறுகிறார். வேய்பட்டர் என்பார் இறைவனுக்குத்திரு வமுது ஆக்குவதற்கு உலர்த்தியிருந்தநெல்லை மழையினால் நனையாதவாறு இறைவன் வேலிகட்டிக் காத்தமையால் தலத்துக்கு நெல்வேலி என வழங்கப்பெற்றது எனத் தல புராணம் கூறுகிறது. மூங்கில் வடிவாக இருந்து இடையன் சுமந்து வந்த பாற்குடத்தை இடறச் செய்து அதனை ஏற்றருளியதால் வேணுவனம் எனவும் இத்தலம் வழங்கப் பெற்றது,

நாற்புறங்களில் நெல் வயல்கள் வேலி போலச்சூழ்ந்த ஊர் ஆனதால் நெல்வேலி என இவ்வூர் வழங்கப்பெற்றது எனவும் கூறுவர். இவ்வாறே நெல்வயல்களை ஊரின் வாயிலிலுடைய சிதம்பரத்திற்கு அருகிலுள்ள ஊர் நெல் வாயில் என வழங்கப்பெற்றதைக் காணலாம்.

இத்தலத்திற்கு வேணுவனம், கழைவனம், சாலிப்பதி, பிரமவிருத்தபுரம், தென்காஞ்சி முதலிய வேறு பெயர்கள் தலபுராணங்களில் குறிக்கப்பட்டுள்ளன.

தேவாரத்தில்

இத்தலத்தின் இயற்கை வளங்களையும் இறைவர் பெருமைகளையும் திருஞானசம்பந்தர் இத்தலத் திருப்பதிகத்தில் அழகுறக் குறித்துள்ளார்.

சோலைகளில்கொன்றை பொன் சொரிகின்றனஎன்றும் செருந்திசெம்பொன் போல மலர்கின்றன என்றும் வீதி களில் தாழைமலர்களில் நுழைந்து தென்றல் வந்துலவு கிறது என்றும் ஊர் வானளாவிய மாளிகைகளை உடையது

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation

என்றும், இந்நகரின் புகழ் திக்கெலாம் பரவியுள்ளது என்றும் குறித்துள்ளார்.

பொழில்களில் மந்திகள் மரக்கிளைகளில் தாவிப்பாயும் போது மதுத்திவலைகள் சிந்து பூந்துறையை உடையது நெல்லைநகர் என்றும் இவ்வூரில் நாள்விழாக்களும் திங்கள் விழாக்களும் நிகழ்கின்றன என்றும் கூறுகிறார்.

இத்தலத்திறைவரைச் செல்வர் எனப்பாடல் தோறும் குறிப்பிட்டருளுகிறார். அவர் தம் திருப்பெயர் மருந்து மந்திரம் முதலிய அனைத்துமாய் விளங்கி நலஞ் செய்வது என்றும், அவர்மீது அருளிய இத்திருப்பதிகப் பாடலைப் பாடி ஆட அருவினைகள் கெடும் என்றும் கூறுகிறார். காந்திமதியம்மைக்கு வடிவுடையம்மை என்றதொரு திருப் பெயருமுண்டு. ஞானசம்பந்தர் 'வடிவுடை மங்கையோர் பங்கினர் என அம்மையைக் குறிப்பிட்டும் அருளியுள்ளார்.

கோயிலமைப்பு

நெல்லையப்பர் கோயில் இரண்டு பெரிய கோயில் களாகப் பிரிந்திருக்கிறது. தெற்கே இருப்பது வடிவம்மை யாகிய காந்திமதித்தாயின் திருக்கோயில். வடக்கே இருப்பது நெல்லையப்பர் திருக்கோயில். இரண்டு கோயில் களின் வாயில்களிலும் இராஜ கோபுரங்கள் உள்ளன. நெல்லையப்பர் கோபுரம் கி. பி. 1606லும், அம்மைகோபுரம் கி. பி. 1626 லும் கட்டப்பெற்றன.

அம்பிகை கோயில் கோபுர வாயிலை அடுத்திருப்பது ஊஞ்சல்மண்டபம் 96 தத்துவங்களைப்போல 96தூண்களை உடையதாய் இம்மண்டபம் விளங்குகின்றது. இதனைக் கட்டியவர் சேரகுளம் வள்ளல் பிற்விப் பெருமாள் பிள்ளையன். சிந்துபூந்துறையிலுள்ள தைப்பூச மண்டபத்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

தைக்கட்டியவரும் இவரேயாவார். திருமண மண்டபம் அம்மை கோயிலுக்குத் தெற்கே ஆயிரக்கால் மண்டபம் என்ற பெயருடன் உள்ளது.

சுவாமி கோயிலையும் அம்பாள் கோயிலையும் இணைப்பது சங்கிலி மண்டபம் எனப்பெறும். இதனைக் கி.பி. 1647 இல் வடமலையப்பப் பிள்ளையன் கட்டி இணைத்தார். இதற்கு மேல்புறம் 1756 இல் வேங்கட கிருட்டின முதலியார் நூறு கால்களை உடைய வசந்த மண்டபத்தைக் கட்டினர்.

சங்கிலிமண்டபத்தின் வடக்கே பெருமான்கோயிலின் தெற்கு வாசலில் நடுக்கோபுரம் உள்ளது.

நெல்லையப்பர் கோயிலின் தெற்குத் திருச்சுற்றின் தென்புறமுள்ள தூண்களில் பிள்ளையன் காலம் வரை அரசாண்டிருந்த நாயக்க மன்னர்களின் உருவச்சிலைகள் உள்ளன. மேற்குத் திருச்சுற்றின் வடமேற்குப் பகுதியில் கி. பி. 1642 இல் திருச்செந்தூரில் ஆறுமுகப்பெருமானைக் கடலிலிருந்து மீட்டு அருள்பெற்ற வடமலையப்பப் பிள்ளையனால் கட்டப்பெற்ற ஆறுமுக நயினார் கோயில் உள்ளது.

இக்கோயிலில் ஒரே கல்லில் மயில் வாகனமும் அதன் மேல் வள்ளிதேவயானையுடன் ஆறுமுகப் பெருமானும் பேரழகுடன் விளங்குகின்றனர்.

கிழக்குத் திருச்சுற்றின் வடபுறம் இருப்பது சோமவார மண்டபம் எனப்படும். இதிலுள்ள கல் உத்தரங்களும் வளைவுகளும் மரத்தாலானவை போலவே 78 தூண்களின் மேல் அமைந்துள்ளன.

பெரிய கொடிமரம் கி.பி. 1555 இல் அமைக்கப்பட்டது. பெரிய நந்தி மண்டபம் 1654 இல் சிவந்தியப்பநாயக்கரால் கட்டப்பட்டது.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

கொடிமரமண்டபத்தின் தூண்களில் விளங்கும் இசை யாளர், வீரர்கள், வீரபத்திரர் முதலிய சிற்பச்சிலைகள் நுண்ணிய சிற்பத்திறன் காட்டுவன.

உள்ளே உள்ள பெருமான் மணி மண்டபத்தின் அமைப்பு நிகரற்றது. ஒரு கல்லினாலாகிய தூண்களில் அறுபத்து நான்கு சிறுசிறு தூண்கள் விளங்கும்படியாக அமைத்து அச்சிறு தூண்களில் வேறுவேறு இசையொலி தோன்றும் படியாகச் செய்தமைத்த சிற்பக்கலைத் திறன் கண்டு மகிழத் தக்கது. இம் மணிமண்டபத்தை அமைத் தவர் திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்த கூன்பாண்டி யராகிய நின்றசீர் நெடுமாற பாண்டியர் என்பதைப் பின் வரும் தலபுராணப் பாடலால் அறியப்படுகிறது.

நீதிதழைத் தோங்குதிரு நெல்வேலி நாதர்முன்பு
நிலைபெற் றேங்கச்
சோதிமணி மண்டபத்தைத் தூயமக மேருவெனத்
துலங்கச் செய்தே
வேதிகைபொற் படிதூண்கள் விளங்குதிரு வாயிலணி
விரவச் சூழ்ந்த
கோதில்மணிக்கோபுரமும் சேண்மதிலும் வெள்விடையும்
குலவச் செய்தான்.

— நின்றசீர் நெடுமாறர் சருக்கம். 56

நெல்லையப்பர் திருக்கோயிலில் இரண்டு சிவலிங் கங்கள் இருக்கின்றன. மூலமூர்த்தியாக விளங்குபவர் நெல்லையப்பர். இவருக்கு வேண்டவளர்ந்த நாதர் எனவும் திருப்பெயர் உண்டு. முழுதும் கண்ட இராமபாண்டியன் வேண்ட வேண்ட வளர்ந்தருளியவர். தாமே முளைத்து வளர்ந்த மூர்த்தி.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

இவருக்கு வடபுறம் நெல்லிக் கோவிந்தர் படுத்த திருக்கோலத்தில் இருக்கிறார். உள்திருச்சுற்று சிவலோகப் பத்தி எனப்பெறும். அதில் வடக்குத் திருச்சுற்றின் பள்ளத்தில் மூங்கில் முளையில் முளைத்தெழுந்த வேணுவன நாதர் விளங்குகிறார். முழுதும் கண்ட இராமக்கோனுக்கு முத்தியருளியவர் இவர். வேணுவனநாதர் கோயில் தனிக் கோயிலமைப்புடையது.

வெளித் திருச்சுற்றில் தென் மேற்கு மூலையில் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த ஐதிகச் சிற்பமுள்ளது.

மேற்குத்திருச்சுற்றின் வடபுறம் கல் வளைவுடன்கூடிய மண்டபம் உள்ளது. இதுதான் தாமிர சபை எனப்படும். மார்கழித் திருவாதிரையில் கூத்தப் பெருமான் திருநடனக் காட்சிதரும் இச்சபை தாமிரசபை எனப்படும்.

மூர்த்திகள்

இறைவர் திருப்பெயர் :- அருள்மிகு நெல்லையப்பர் என்பதாகும். அருள்மிகு வேணுவனநாதர் சந்நிதியும்சிறப் புடையது. இறைவி திருப்பெயர் :- அருள்மிகு காந்திமதி அம்மை. வடிவுடைநாயகி, வடிவம்மை என்றபெயர்களும் உள்ளன. நடராஜர் சந்நிதி சிறப்புடையது. தாண்டவம் - காளிகாதாண்டவம். சபை-தாமிரசபை. தலமரம்-மூங்கில். தீர்த்தம்-பொற்றுமரை. தாமிரவருணி முதலியன.

பஞ்ச சபைகள்

திருவாலங்காடு-இரத்தினசபை. சிதம்பரம்-கனகசபை (பொன்னம்பலம்) மதுரை - ரசிதசபை (வெள்ளியம்பலம்) திருநெல்வேலி-தாமிரசபை. திருக்குற்றாலம்-சித்திரசபை. ஐந்து சபைகளைக் குறிக்கும் பாடல்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

குடதிசை யதனில் மருவுகுற் றலம்
கோதறு சித்திர சபையாம்;
குற்றமில் குணக்கின் பழையனூர் மன்றம்
குலநவ ரத்னமன் றென்பர்;
அடல்விடைப் பாகன் நெல்லியம் பதியில்
அம்பலம் தாமிர சபையாம்;
ஆலவாய் மதுரை வெள்ளியம் பலமாம்
அணிதில்லைச் செம்பொனம் பலமே.

— இரட்டையர் தில்லைக்கலம்பகம்

பாண்டி பதினொன்று தலங்கள்

திருவாலவாய், திருஆப்பனூர், திருப்பரங்குன்றம், திருஏடகம்,திருக்கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருப்புன வாயில், திருஇராமேச்சுரம், திருவாடானை, திருக்கானப்பேர் (காளையார் கோயில்) திருப்பூவணம், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருநெல்வேலி ஆகிய பதினொன்றாம். இவற்றைக் குறிக்கும் வெண்பா.

கூடல் புனல்வாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடகம் நெல்வேலி இராமேசம் — ஆடானை
தென்பரங்குன் றம்சுழியல் தென்திருப்புத் தூர்காளை
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

முத்தித் தலங்கள்

தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் முத்தித் தலங்களில் ஒன்றாகத் திருநெல்வேலியைக் குறிப் பிட்டு அருளியுள்ளார்.

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லை, களர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

எனச் சிவபோக சாரப்பாடலில் இத்தலத்தின் பெயரைக் கூறினாலே முத்தி சித்திக்கும் எனக் குருஞானசம்பந்தர் கூறியருளியுள்ளார்.

புராண வரலாறுகள்

திருநெல்வேலிக்கு இரண்டுதலபுராணங்கள் உள்ளன. நெல்லைப்புராணம் நெல்லையப்பப் பிள்ளையால் 6891 செய்யுட்களில் பாடப் பெற்றுள்ளது. வேணுவனபுராணம் எனச்சுருக்கமானதெரு புராணமும் உள்ளது. 454செய்யுட்களைக் கொண்டது.

அம்பிகை அறம் வளர்த்தது

கயிலைமால் வரையில் சிவபிரான் சிவபூசையின் சிறப்பினைக்கூறக் கூட்ட உமையம்மை பெருமானைப் பூசித்து மகிழவிரும்பினன். சிவபிரான் மண்ணுலகில் தென்காஞ்சி எனப்படும் திருநெல்வேலியிற் சென்று தம்மைப் பூசித்து அருள்பெறுமாறு பணித்தார். இறைவன் அருளியவாறு நெல்லைமாநகரில் கம்பா நதிக்கரையில் காஞ்சிமரநிழலில் சிவபெருமானை எழுந்தருளச் செய்து ஆகமவிதிப்படித் தூபதீபங்களோடு அருச்சித்தாள். இறைவன் உமையம்மைக்குக்காட்சி வழங்கினர். உமையம்மை இறைவனிடம் இப்பதியில் தங்கி எண்ணான்கு அறமும் செய்ய அருள் புரியுமாறுவேண்டினர். பெருமான் இருநாழி நெல்லருளி அறம்பல புரிந்து வருமாறு பணித்தார். உமையம்மை. இத்தலத்தில் பல்லாண்டுகள் எழுந்தருளியிருந்து முப்பத்திரண்டு அறங்களை முறையோடு செய்தி திருக்கயிலைமால் வரையை அடைந்தார்.

அகத்தியர் மணக்கோலங் கண்டது

இறைவன் இமயமலையில் பார்வதி தேவியை மணம் புரிந்த காலத்தில் வடதிசை தாழவும் தென்திசை உயரவும்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

கண்டு அகத்தியரைத் தெற்கே உள்ள பொதியமலை செல்லுமாறு பணித்தருளினர். அகத்தியர், உலோபா முத்திரையாருடன் தென்பொதியம் வந்தருளினர். வந்து தங்கியபின் தன் மனைவி உலோபாமுத்திரையார்க்குத் திருநெல்வேலியின் தலப்பெருமையை எடுத்துக்கூறி இருவரும் வந்து இறைவனை அருச்சித்து வழிபட்டனர்.

இறைவன் தனது திருமணத் திருக்கோலத்தை அகத்தியர்க்கும் அவர் மனைவி உலோபாமுத்திரையார்க்கும் காட்டி அருள்புரிந்தார். அகத்தியர் தன் மனைவிக்குக் கூறுவதுபோல இத்தலப் பெருமைகள் பலவும் கூறப்பட்டுள்ளன.

நெல்லை காசி முதலிய முத்தித்தலங்களில் ஒன்று. இது தென்காஞ்சி எனப்படும். நெல்லையப்பரை வழிபடுவோர் சீவன் முத்தர்கள். இத்தலத்தில் அக்னிட்டோம யாகம் செய்தோர் செல்வராவர். பிறதலங்களில் ஓராண்டுமந்திரம் செபிக்கும்பயனை இத்தலம்ஒருநாள் செபிக்கின்தரவல்லது. நூறுமுறை உருத்திர மந்திரம் செபிப்போர் பிறவிக்கடலை நீந்துவர். காயத்திரி மந்திரம் ஓதுபவர் பிரமபதம் பெறுவர். திருநீறு,உருத்திராக்கம், பூதானங்கள்முதலியன புரிந்தோர் நற்கதிகளையடைவார். இத் தலத்தில் முதிய அந்தணன் ஒருவனுக்குத் தாம்பூலம் வழங்கிய புண்ணியத்தால் வணிகனும் அவன் மனைவியும் நற்கதியடைந்தனர். கழைவனம் எனப்படும் இத்தலத்தில் சிவாலயப்பணி முதலியன செய்வோர் சிவலோகம் பெறுவர்.

இறைவன் கங்களாள வேடரானது

திருமால் இறைவனது கங்காள வேடத்தைக் காண அருள்புரியுமாறு வேண்டினர். இறைவன் நெல்லைநகர் அடைந்து தவம்பல புரியுமாறு பணித்தார். அவ்வாறே

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jaigad

இத்தலத்தை அடைந்த திருமால் இறைவனை அருச்சித்துத் தவம்பல புரிந்து வாழ்ந்தார். இறைவன் திருமாலுக்குத் தனது கங்காள வேடத்தைக்காட்டி அருள்புரிந்தார். இத் தலத்தில் இறைவனை வழிபடுவார்க்கு முத்திப்பேறளித் தருளுமாறுவேண்டினர் திருமால். இறைவனும் அவ்வாறே அருள்புரிவதாகக்கூறி மறைந்தார்.

வேண்ட வளர்ந்தது

பொருனைக் கரையில் மணலை நகரில் இருந்து அரசாண்ட பாண்டியன் முழுதுகண்டராமன் எனப் படுவான். அம்மன்னனின் ஆநிரைகளை முழுதுகண்ட ராமக்கோன் என்னும் இடையன் மேய்த்துவந்தான். அம் மன்னனுக்கு நாள்தோறும் குடம்நிறையப் பால் சுமந்து சென்று அளிக்கும் கடமையை அவ்விடையன் புரிந்து வந்தான். நாள்தோறும் குறிப்பிட்டதொரு இடத்தில் மூங்கிற்புதர் அருகில் ஒரு மூங்கில் தண்டில் கால் இடறிக் குடத்தில் உள்ள பாலைச் சிந்திக் குறைந்த பாலையே அரண்மனைக்கு எடுத்துச்சென்று வந்தான். குடப்பால் குறையக் காரணம் யாது என மன்னன் கேட்டபோது அவ் இடையன் வழியிடை நிகழ்ந்ததை மன்னனிடம் கூறினன். மன்னன் இடையனைச்சினந்தான். இடையன் வருந்தித் தனக்கு இடர்விளைத்த மூங்கிற்புதரை வெட்டி யெறிய முற்பட்டான். மூங்கிலை வெட்டும்போது குருதி வெளிப்படக் கண்டு அஞ்சி மன்னனிடம் சென்று முறை யிட்டான். பாண்டி மன்னன் மனம் பதைத்து காட்டுக்குச் சென்று இடையன் வெட்டிய மூங்கிற்புதரைக் கண்டான். அப்புதரில் சிவலிங்கம் இருப்பதையும் அதன் முடிமேல் கோடெரி பட்டிருப்பதையும் பார்த்து கையால் குருதி வழிவதைத் தடுத்து பெருமானே வளர்ந்தருள் என வேண்டினன். பெருமான் மூலலிங்கமாய் வளர்ந்து வெளிப்பட்டார். மன்னன் அவ்விடத்தில் பெருமானுக்கு

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

ஆலயம் எடுத்தான். ஆகமவிதிப்படி பூஜை செய்தான். மூங்கிற்றண்டாய்த்தோன்றி வெளிப்பட்ட சிவபெருமானே வேய்முத்தர் எனப் போற்றினன். சிவகதி பெற்றான்.

நெல்லிவேலிகட்டிக்காத்தது

முன்னொரு காலத்திலே பன்னிரண்டாண்டுகள் வற்கடம் வந்தது. நெல்லியப்பரைப் பூஜித்து வழிபடும் வேதசருமன் என்னும் அந்தணன் ஒருவன் இறைவனது நிவேதனத்துக்காகத் தனக்குக்கிடைத்த நெல்லி தரையில் உலர்த்திவிட்டுநீராடச்சென்றார். வருவதற்குள் பெருமழை பொழிந்து ஊரெங்கும் வெள்ளம் சூழ்ந்துவரக்கண்டு நெல்லிக் காத்தருளுமாறு பெருமானே வேண்டினன். பெருமான் மழையில் அந்நெல் நனைந்திடாமலும் அவ் விடத்துக்கு மட்டும் வெயிலொளி வீசச்செய்தும் அந் நெல்லிக் காத்தருளினர். வேதியனும் இறைவன் அருளைப் போற்றித் தன் நெல்லிக்கொண்டு அமுதுசெய்து படைத் துண்டு மகிழ்ந்தான். வேதியன் நெல்லி வேலிபோலிருந்து காத்த இறைவன் நெல்வேலிநாதர் எனப்பெற்றார்.

வேதங்கள் வேணுவனமானது

வேதங்கள் நான்கும் மரங்களாய்நின்று இறைவனுக்கு நிழல்செய்து நித்தியமாயிருக்கவேண்டுமென்று இறைவனே வேண்டின. பெருமான் நெல்வேலியில் வேணுவாயிருக்கு மாறும் அவைகளுக்கு அடியில் தாம் திருமூலநாதராய் விளங்குவதாகவும் அருள்புரிந்தார்.

தசரதராமன் பேறுபெற்றது

தசரதராமன் மாயமானைத்தொடர்ந்துபோகும் வழியில் கயத்தாற்றில் வில்லினால்கீறிப் பொருநையைஅழைப்பித்து

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

மேல்பக்கம் இலிங்கம் அமைத்து வழிபட்டார். சீதையை இழந்தபின் அகத்தியர் உரைப்படி நெல்லையை அடைந்து இறைவரைவழிபட்டு பாசுபதாஸ்திரம்பெற்று இராவணனை வென்று சீதையை மீட்டு அயோத்தியை அடைந்தார்.

கருவூர்ச் சித்தர்

கீரனூரில் வேதியர்குலத்தில்பிறந்தவர். இவர் தலங்கள் தோறும் தரிசனம்செய்து வருகையில் நெல்லையை அடைந்தார். இறைவர்க்கு நிவேதனம்செய்யும் சமயமாயிருந்தது. நெல்லையப்பா என மும்முறை கூப்பிட்டும் இறைவர் பதில் கூறுதிருக்கக் கண்டு எருக்கு எழ என்று சாபமிட்டு மானூர் போனர். நெல்லையப்பர் விடைமீது ஏறி மானூர் சென்றுகருவூர்ச்சித்தர்க்குக் காட்சிதந்தார். சித்தர் நெல்லை வந்து பிழைக்கு வருந்தி ஆண்டுதோறும் ஆவணிமூல நாளில் தமக்குக் காட்சிதரவேண்டுமென்று வரம்பெற்று இங்கு ஈசன் இருக்கின்றார் என்று மும்முறைகூறி மீண்டும் மானூர் சென்றார்.

திருநடனச் சிறப்பு

உமையம்மை இறைவனது திருநடனத்தைக் காண விரும்பினள் விரும்பியவாறு பெருமான் நெல்லை நகரில் உமையம்மை காணத் திருநடனம் புரிந்தருளினர்.

தீர்த்தச் சிறப்பு

இத்தலத்திலுள்ள பொற்றுமரை தீர்த்தம் புகழ்மிக்கது. இறைவனே இத்தீர்த்த வடிவாயிருத்தலால் இதில் நீராடுவோரும் இதன் கரையில் இருந்து ஜபம் செய்வோரும் இனிய நற்பயன்கள் பலவற்றையும் எய்துவர். புண்ணிய காலங்களில் இதில் மூழ்கி நெல்லையப்பரையும் காந்திமதியையும் வழிபடுவோர் அடையும்பயன்கள் அளவிலாதன.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

தீர்த்தங்கள்

இக்கோயிலுக்குரிய தீர்த்தங்கள் 32 இவற்றுள் 9 தீர்த்தங்கள் முக்கியமானவை. கோயிலுக்குள் இருப்பவை 4. அவை பொற்றுமரை, கருமாறி, வயிரவதீர்த்தம். சர்வதீர்த்தம் எனப்படும். வெளியில் இருப்பவை கம்பை. தெப்பக்குளம். சிந்துபூந்துறை துர்க்கைதீர்த்தம். குறுக்குத் துறை ஆகிய ஐந்துமாம்.

அம்பாள் கோயிலில் ஊஞ்சல் மண்டபத்துக்கு வட புறம் விளங்குவது பொற்றுமரை. தென்புறம் படித்துறை மண்டபம் தருமை ஆதீனத்தால் திருப்பணி செய்யப் பெற்றது. மாசிமகத்தன்று தெப்பத்திருவிழா இங்குநிகழும். கருமாறித் தீர்த்தம் சுவாமிகோயில் மேலப்பிராகாரத்தில் இருப்பது. துர்வாச முனிவர் சாபத்தால் யானையான இந்திரத்துய்மன் தேவவடிவம்பெற்ற தீர்த்தம்.

நூல்கள்

திருஞானசம்பந்தர் பாடியருளிய திருப்பதிகம் சுந்தரர் அருளியஊர்த்தொகை ஆகிய தேவாரங்களுடன், நெல்லை யப்பப்பிள்ளை பாடிய திருநெல்வேலித் தலபுராணம். வேணுவனபுராணம். அழகிய சொக்கநாதர் பாடிய காந்தி மதியம்மை பிள்ளைத்தமிழ், கலித்துறை அந்தாதி. அம்பிகாபதி அய்யர் பாடிய நெல்லை வருக்கக்கோவை. சிதம்பரநாதக் கவிராயர் பாடிய மும்மணிக்கோவை. தையல்பாகம்பிள்ளை பாடிய நெல்லை அந்நாதி. காந்திமதி யம்மன் பதிகம். கணபதி சாஸ்திரிகள் மொழிபெயர்த்த தாமிரபர்ணிமகாத்மியம், சிந்து, சேத்திரக்கும்மி முதலியன உள்ளன.

நின்றசீர் நெடுமாற பாண்டியர் நெல்லையில் போரிட்டு வென்றதை ' நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன் '

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

எனத்திருத்தொண்டத்தொகையில் சுந்தரர்குறிப்பிடுகிறார். திருக்கோயில் தலவரலாறு வித்துவான் திரு. பு. சி. புன்னை வனநாத முதலியார் அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது.

கல்வெட்டுக்கள்

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் பல. அவற்றுள் கி. பி. 950ல் இருந்த வீரபாண்டியன் சாசனங்கள் ஐந்தும் பழமையானவை. முதலாம் இராசேந்திரசோழன் கி. பி. 1011-14, முதலாம் குலோத்துங்கசோழன். கி.பி. 1074-1148 சாசனங்கள் திருநெல்வேலி வென்ற செய்தியைத் தெரிவிப்பன. முதலாம் மாறவர்மன் கி. பி. 1238-51 மாறவர்மன் குலசேகரதேவன் கி. பி. 1314-21 சாசனங்களும் உள்ளன. கல்வெட்டுக்களில் இறைவன்பெயர் திருநெல்வேலி உடையார் என்றும், உடைய நாயனார் என்றும் இறைவி பெயர் திருக்காமக்கோட்டமுடையநாச்சியார் என்றும் குறிக்கப்படுகிறது. குலசேகரபாண்டியன் கி. பி. 1944-21 சோழஹொய்சல மன்னர்களை வென்றுகொண்ட பொருள்களைக்கொண்டு பெரியபிராகாரத் திருமதிலை அமைத்த செய்தியையும் மன்னர்களும் மக்களும் இக்கோயில் பூசை முறைகட்கும், அமுதுபடி, சாத்துபடி நந்தவனம், விளக்கு எண்ணெய், ஆராதனை முதலியவற்றுக்குப்பெரும்பொருள் வழங்கியதையும் காணலாம்.

திருவிழாக்கள்

நாள்தோறும் ஆறுகாலபூஜைகள் நடைபெறுகின்றன. ஆனிமாதத்தில் பெருவிழா நிகழ்கிறது. மற்றும் விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைச் சோமவாரம் மார்கழித் திருவாதிரை, மாசி சிவராத்திரி, வைகாசி வசந்தத் திருவிழா முதலியன நிகழ்கின்றன.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

நிர்வாகம்

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையினரின் மேற்பார்வையில் அறங்காவலர் குழுவுடன் நிர்வாக அதிகாரியால் திருக்கோயில் பரிபாலிக்கப்படுகிறது.

தருமை ஆதீனம் மடம்

திருநெல்வேலிப் பேருந்துநிலையத்திற்கருகில் சிந்துபூந் துறையில் தருமை ஆதீன மடம் ஸ்ரீ திருஞானசம்பந்தர் நிலயம் என்ற பெயருடன் விளங்குகின்றது. ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களில் ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் ஸ்ரீ தமிழாகர முனிவர் முதலியோர் இங்கு எழுந் தருளியிருந்து சமயமும் தமிழும் வளரத் தொண்டுகள் புரிந்துள்ளனர்.

தருமை ஆதீனம் 6 ஆவது குருமகாசந்நிதானம்ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்ததேசிக பரமாசாரியசுவாமிகள்குருமூர்த்த ஆலயம் இங்குள்ளது.

தருமை ஆதீனத்துக்குச் சொந்தமான நிலபுலன்கள் இங்குள்ளன. ஸ்ரீ நெல்லையப்பர் ஸ்ரீ காந்திமதியம்மை பால் கட்டளை முதலிய அறக்கட்டளைகளும் பிற தருமங்களும் செய்விக்கப்படுகின்றன. சமயப்பிரசாரம், வாரவழிபாடு முதலியன நிகழ்த்தப்படுகின்றன,

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானத்தின் அருளாட்சிக் காலத்தில் 9—5—1993 அன்று இங்குள்ள குருமூர்த்த ஆலயம் புதுப்பிக்கப் பெற்று மகாகும்பா பிஷேகம் செய்விக்கப்பெற்றது. மக்கட்கு திருமணம் போன்ற நிகழ்ச்சிக்களுக்குப் பயன்படும் வகையில் ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் நினைவு மண்டபம் புதிதாகக் கட்டித் திறந்து வைக்கப்பட்டது. 26—11—2001 இல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி நினைவு மருத்துவமனைக்கட்டிடம் கட்டித் திறந்துவைக்கப்பெற்றுள்ளது.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

சிவமயம்

திருநெல்வேலித் திருப்பதிகம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

திருப்பதிக வரலாறு

திருஞானசம்பந்தர் பற்றூர் புரஞ்செற்றூராகிய புற்றூர் அவணிவாரைக்கற்றூர்தொழுதேத்துங்கானப்பேர், சுழியல் குற்றூலம், குறும்பலா ஆகிய நற்றூனங்களைக் கும்பிட்டு, திருநெல்வேலியைக் குறுகிப் பாடியருளியது இத்திருப் பதிகம்.

பண் – சாதாரி

திருச்சிற்றம்பலம்

மருந்தவை மந்திரம் மறுமைநன்
னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே. 1

---

1. முல்லை நிலத்தில் கொன்றை மரங்கள் பூத்த மலர்களை உதிர்க்க, அருகிலே உள்ள செருந்தி மரங்கள் பொன்போன்ற மலர்களை விரிக்கும் திருநெல்வேலியில் உறையும் செல்வராகிய சிவபெருமானின் திருநாமமாகிய திருவைந்தெழுத்து, மருந்தும், மந்திரமும் மறுமைக்கண்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

என்றுமோ ரியல்பின ரெனநினை
வரியவ ரேறதேறிச்
சென்றுதாஞ் செடிச்சியர் மனைதொறும்
பலிகொளு மியல்பதுவே
துன்றுதண் பொழில்நுழைந் தெழுவிய
கேதகைப் போதளைந்து
தென்றல்வந் துலவிய திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே. 2

பொறிகிள ரரவமும் போழிள
மதியமுங்கங் கையென்னும்
நெறிபடு குழலியைச் சடைமிசைச்
சுலவிவெண் ணீறுபூசிக்

நன்மை விளைக்கும் நெறிகளும், மற்றும் எல்லா நன்மை களும் ஆகும். அன்றியும் தீர்த்தற்கரிய துயரங்களையும் தீர்க்கும். அதனை நன்னெஞ்சமே எப்போதும் சிந்தை செய்வாயாக.

2. நெருங்கிய குளிர்ந்த சோலைகளில் புகுந்து தழைத் தெழுத்த தாழம்பூவின்மடலிலுள்ள பொடிகளைத் திமிர்ந்து கொண்டு தென்றல்வந்துலவிய திருநெல்வேலியிலுறையும் செல்வராகிய பெருமான் என்றும் ஒரு தன்மையினரா யிருப்பர் என நினைக்க முடியாதவர்; சிலசமயம் காளைமீது ஏறிச் சென்று வேடர் போன்ற தாழ்குலத்தோர் மனை தோறும் பிச்சையேற்கும் தன்மையும் அவருக்கு உண்டு.

3. அடர்ந்த பொழில்களால் சூழப்பட்ட திருநெல் வேலியிலுறையும் செல்வராகியசிவபெருமான், புள்ளிகளை உடைய பாம்பையும், பிறைமதியையும் கங்கை என்னும்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

கிறிபட நடந்துநற் கிளிமொழி
யவர்மனங் கவர்வர்போலும்
செறிபொழில் தழுவிய திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே. 3

காண்டகு மலைமகள் கதிர்நிலா
முறுவல்செய் தருளவேயும்
பூண்டநா கம்புறங் காடரங்
காநட மாடல்பேணி
ஈண்டுமா மாடங்கண் மாளிகை
மீதெழு கொடிமதியம்
தீண்டிவந் துலவிய திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே. 4

தழைத்த கூந்தலை உடைய பெண்ணையும் சடைமீது கலந்து அணிந்து, திருநீறுபூசிவிளையாட்டாகப்பிச்சைக்குச் சென்று கிளிபோலும் மொழியினராகிய தாருகாவனத்து முனிபத்தினியரின் மனங்களைக்கவர்பவர்.

4. மாடங்களிலும், மாளிகைகளிலும் கட்டியுள்ள கொடி சந்திரமண்டலம் வரை உயர்ந்து சந்திரனை மோதி உலாவும் திருநெல்வேலியில் உறையும் செல்வராகிய சிவ பெருமான் அழகுபொருந்திய உமாதேவியார் ஒளியை உடைய வரிசையான பற்களால் சிரிப்புடையவராய் அருகிலிருந்தருளவும் அதற்கேற்றவண்ணம் நடவாமல் ஊர்க்குப்புறம்பேயுள்ள சுடுகாட்டை நாடகமேடையாகக் கொண்டு பாம்பை அணிந்து கூத்தாடுதலை விரும்பியவரா யிருப்பர்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

ஏனவெண் கொம்பொடும் எழில்திகழ்
மத்தமு மிளவரவும்
கூனல்வெண் பிறைதவழ் சடையினர்
கொல்புலித் தோலுடையார்
ஆனினல் ஐந்துகந் தாடுவர்
பாடுவ ரருமறைகள்
தேனில்வண் டமர்பொழிற் றிருநெல்வேலி
யுறைசெல்வர் தாமே. 5

வெடிதரு தலையினர் வேனல்வெள்
ளேற்றினர் விரிசடையர்
பொடியணி மார்பினர் புலியத
ளாடையர் பொங்கரவர்

---

5. வண்டுகள் தேனில் அமர்ந்து உண்ணும் பொழில் சூழ்ந்துள்ள திருநெல்வேலியில் உறையும் செல்வராகிய சிவபெருமான், பன்றிக்கொம்பு, அழகிய ஊமத்தை, பாம்பு, வளர்ந்தபிறை ஆகியன தவழும் சடைமுடியை உடையவர்; கொல்லவந்த புலியின் தோலை உரித்தவர்; ஆனேற்றை விரும்பி அபிடேகம் கொள்பவர்; அரிய மறைகளைப் பாடுபவர்.

6. புதர்கள் அடர்ந்த பொழில்களால் சூழப்பட்ட திருநெல்வேலியில் உறையும் செல்வராகிய சிவபெருமான் வெடித்த மண்டையோட்டை அணிந்தவர்; சினம் பொருந்தியவெண்மையானவிடையையுடையவர்; விரித்த சடையை உடையவர்; திருநீறு அணிந்த மார்பினர்; புலித் தோலை உடுத்தவர்; பாம்பை அணிந்தவர்; அழகிய உமை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

வடிவுடை மங்கையோர் பங்கினர்
மாதரை மையல்செய்வார்
செடிபடு பொழிலணி திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே. 6

அக்குலா மரையினர் திரையுலா
முடியின ரடிகளன்று
தக்கனூர் வேள்வியைச் சாடிய
சதுரனூர் கதிர்கொள்செம்மை
புக்கதோர் புரிவினர் வரிதரு
வண்டுபண் முரலுஞ்சோலைத்
திக்கெலாம் புகழுறுந் திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே. 7

யம்மையை ஒருபாகத்தே உடையவர்; தாருகாவனத்து மங்கையரை மையல் செய்பவர்.

7. வண்டுகள் இசைபாடும் சோலைகள் சூழ்ந்ததும், எட்டுத்திசைகளிலும் புகழ் நிரம்பியதுமான திருநெல்வேலியில் உறையும் செல்வராகிய சிவபெருமான், அக்குப் பாசி என்னும் மணிகளை அணிந்த இடையை உடையவர்; கங்கையை அணிந்த திருமுடியினராகிய அடிகள். அன்று தக்கன் வேள்வியை அழித்த பெருவீரத்தை உடையவர்; செவ்வொளி பொருந்திய சடையை உடையவர்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

முந்திமா விலங்கலன் றெடுத்தவன்
முடிகள்தோள் நெரிதரவே
உந்திமா மலரடி யொருவிர
லுகிர்நுதி யாலடர்த்தார்
கந்தமார் தருபொழின் மந்திகள்
பாய்தர மதுத்திவலை
சிந்துபூந் துறைகமழ் திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே. 8

பைங்கண்வா ளரவணை யவனெடு
பனிமல ரோனுங்காண
அங்கண வருளென வவரவர்
முறைமுறை யிறைஞ்சநின்றார்

---

8. வாசனை நிறைந்த சோலைகளில் குரங்குகள் பாய்வ தால் மலர்களிலுள்ள தேன் துளிகள் சிந்துகின்ற அழகிய தண் பொருனைத் துறையின் மணம் கமழும் திருநெல் வேலியின்கண் உறையும் செல்வராகிய பெருமான், பெருமைபொருந்திய கயிலைமலையை முந்திச் சென்று எடுத்தவனுகிய இராவணனின் முடிகளோடு தோள்கள் நெரிய அழுத்தி ஒருவிரலின் நகநுனியால் அவனை அடர்த் தவர்.

9. நான்கு வேதங்களைக் கற்ற அந்தணர் கூடிநின்று பாடிவரவும், பெண்கள் நாட்டியம் ஆடவும் நடக்கும் நாள்விழாக்களும் மாதவிழாக்களும் பொருந்திய திருநெல் வேலியில் உறையும் செல்வராகிய சிவபெருமான், பசிய கண்களையும் ஒளியை உடைய அரவணையானுகிய திரு மாலும், குளிர்ந்ததா மரைமலர்மேல்உறையும்நான்முகனும்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

சங்கநான் மறையவர் நிறைதர
வரிவைய ராடல்பேணத்
திங்கணுள் விழமல்கு திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே. 9

துவருறு விரிதுகி லாடையர்
வேடமில் சமண ரென்னும்
அவருறு சிறுசொலை யவமென
நினையுமெம் மண்ணலார்தாம்
கவருறு கொடிமல்கு மாளிகைச்
சூளிகை மயில்களாலத்
திவருறு மதிதவழ் திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே. 10

அடிமுடிகளைக் காணுமல் அங்கணு அருள் என்று முறை முறையே இறைஞ்ச நின்றவர்.

10. கண்டார் மனங்களைக் கவர்கின்ற கொடிகள் கட்டிய மாளிகைகளின் சூளிகைகளில் மயில்கள் ஆட அதைக் காண்பதற்கு மதிதவழும் அம்மாட வீடுகளில் தேவர்கள் வந்தடையும் திருநெல்வேலியில் உறையும் செல்வராகிய சிவபெருமான் எம்தலைவராவர்; அவரைப் புறக்கணிக்கும் துவர்ஆடையை உடுத்தபௌத்தர், தாம் பூண்ட வேடநெறி நில்லாத சமணர் ஆகியோர் கூறும் சிறு சொற்களைப் பயனற்றவை என நினையுங்கள்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

பெருந்தன்மா மலர்மிசை யயனவன்
அனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வேலி
யுறை செல்வர்தம்மைப்
பொருந்துநீர்த் தடமல்கு புகலியுண்
ஞானசம் பந்தன்சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியா
டக்கெடு மருவினையே. 11

திருச்சிற்றம்பலம்

---

11. பெரியதும் குளிர்ந்ததுமாகிய தாமரை மலர்மேல் உறையும் நான்முகனை ஒத்த கல்வியால் நிரம்பிய மறையவர் வாழும் திருநெல்வேலியில் உறையும் செல்வராகிய சிவபெருமானை நீர் நிலைகள் நிரம்பிய புகலிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தர் பாடியருளிய இத்தமிழ் மாலைகளைப்பாடியாட அருவினைகள் கெடும்.

திருவிளக்கு

'கோயில்விளங்கக்குடிவிளங்கும்' என்பது பழமொழி. கோயிலுக்குச்செல்வோர் தம்மால் இயன்றபூசைப்பொருள்களை உதவுதல் சிறந்த சிவபுண்ணியத்தைத்தரும். அவற்றுள் திருவிளக்கு இடுதல் மேலானஞானத்தை அளிக்கும். விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினல் இடவல்லார்க்குக் கரும்பினில் கட்டிபோல்வார்' இறைவர் எனவும். 'விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்' எனவும் தேவாரத் திருமுறை கூறுகிறது.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

விண்ணுளும் தேவர்க்கு மேலாய வேதியனே
மண்ணுளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானே
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணுளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

திருவிசைப்பா

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநா ருயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்கு
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றிருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்தகங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

திருப்பல்லாண்டு

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால்
எங்கும் திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்
குழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதைனன் ஆர்வத் தனத்தினே
அப்பனே ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

பெரியபுராணம்

பற்றுர்தம் புரங்கள்மலைச் சிலையால் செற்ற
பரமனுர் திருப்புத்தூர்ப் பணிந்து போந்து
புற்றரும் பணிபூண்ட புனிதனுர்தம்
பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்றுர்கள் தொழுதேத்தும் கானப்பேரும்
கைகொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக்
குற்றுலம் குறும்பலாக் கும்பிட்டேத்திக்
கூற்றுதைத்தார் நெல்வேலி குறுகினுரே.

புண்ணியனுர் நெல்வேலி பணிந்து போற்றிப்
புரிசடையார் திருப்பதிகள் பிறவும் சென்று
நண்ணியினி தமர்ந்தங்கு நயந்துபாடி
நற்றொண்ட ருடன்நாளும் போற்றிச் செல்வார்
விண்ணவரைச் செற்றுகந்தான் இலங்கைசெற்ற
மிக்க பெரும்பா தகத்தை நீக்கவேண்டித்
திண்ணிய பொற்சிலைத்தடக்கை இராமன்செய்த
திருவிரா மேச்சுரத்தைச் சென்று சேர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

காந்திமதியம்மைப் பிள்ளைத்தமிழ்

வாரா திருந்தால் இனிநானுன்
வடிவேல் விழிக்கு மையெழுதேன்
மதிவாள் நுதற்குத் திலகம் இடேன்
மணியால் இழைத்த பணிபுனையேன்
பேரா தரத்தினெடு பழக்கம் பேசேன்
சிறிதும் முகம்பாரேன்
பிறங்கு முலைப்பால் இனிதூட்டேன்
பிரியமுடன்ஒக் கலையில்வைத்துத்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalgao

தேரார் வீதி வளங்காட்டேன்
செய்யகனிவாய் முத்தமிடேன்
திகழும்மணித் தொட்டிலில் ஏற்றித்
திருக்கண் வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில்
தவழும் குழந்தாய் வருகவே
சாலிப்பதிவாழ் காந்திமதித்
தாயே வருக வருகவே.

— அழகிய சொக்கநாதர்

தனிப்பாடல்

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணைமீதுன்
அருகிருந்து
நீமுத்தந் தாவென் றவர்கொஞ்சும் வேளையில்
நித்தம்நித்தம்
வேய்முத்த ரோடென் குறைகளெல்லாம்மெல்ல
மெல்லச்சொன்னால்
வாய்முத்தம் சிந்தி விடுமோ நெல்வேலி
வடிவன்னையே.

— பலபட்டடைச்சொக்கநாதப்புலவர்

கன்னியா குமாரிஅருள் காந்திமதி மீனாட்சி
கருணைபரு வதவர்த்தனி
கமலைப் பராசத்தி சிவகாம சுந்தரி
காழியுமை பிரமவித்தை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

தன்னிகரி லாஞான அபயவர தாம்பிகை
தையல்அபி ராமிமங்கை
தந்தஅகி லாண்டநா யகிஅறம் வளர்த்தவள்
தண்ணருள்செய் காமாக்ஷி யிங்கு
என்னையாள் கௌரிஜ் வாலாமுகி உணுமுலை
இலங்குநீ லாயதாக்ஷி
எழிற்பிரம ராம்பிகை இலங்குபார் வதியாதி
எண்ணிலா நாமரூப
அன்னையாய்க் காசிமுத லாகிய தலத்துவிளை
யாடிடு விசாலாக்ஷியாம்
அண்டகோ டிகள்பணி அகண்டபூரணியென்னும்
அன்னபூ ரணி யன்னையே.

— ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

Digitized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jaigad

லும்

மிகள்

ன்
வாழ்க

ம்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

zed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jai

ஒ

சிவமயம்

நெல்லை ஸ்ரீ முருகனைப் போற்றிய

கேஷத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

உட்டிரு விளக்கான அகரம்உக ரம்மகரம்
ஒளிர்விந்து நாத வடிவாய்
உயர்மந்த்ர பதவன்ன புவனதத் துவகலைகள்
ஓராறி னுக்கும் முதலாம்
மட்டில்குடி லைப்பொருள் நிரையுமுறை யுஞ்சொல்ல
மாட்டாத படியினலே
மனத்தெழு மகந்தையால்நான்என்னும் வறுமைதனை
மாற்றியருள் வாழ்வு தரவே
எட்டிருங் கைக்கமல னைக்குட்டி யேபின்
இருஞ்சிறையில் இட்டுவைத்தே
இருநூ றெனுங்கணக் கோடு நாலாரும்
எனும்புவன மண்டகோடி
சிட்டிஞ் செய்துபின் அயன்சிறை விடுத்தவா
செங்கீரை யாடியருளே
செல்வந் தழைத்துவளர் நெல்வேலி வாழ்செட்டி
செங்கீரை யாடியருளே.

— ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர்.

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry